விளம்பி வரு பங்குனி மீ
மார்ச் - ஏப்ரல் 2019

மலர்: 1
இதழ்: 12

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com



விளம்பி ஆண்டு பங்குனி மீ
மார்ச் - ஏப்ரல் 2019

மலர்: 1
இதழ்: 12

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - சயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

Editorial Board :
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri P.S. Anand & Sri Rajagopalan Madhavan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay,

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்^{3}ரி ஸமம் ஸ்தா^{2}நம் ப்^{3}ரஹ்மாண்டே^{3} நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே^{3}வோ ந பூ^{4}தோ ந ப^{4}விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

இந்த ஸஞ்சிகையில் மாசி மாதம் கொண்டாடப்பட்ட கீழ்க்கண்ட உத்ஸவங்கள்/ நிகழ்ச்சிகள் நம் நினைவில் நிறுத்தவேண்டி நிழற்படங்களாக ஸமர்ப்பிக்கப்படுகின்றன

- ✓ தை மாதக் கடைசியில் நடைபெற்ற ரத-ஸப்தமி வாகன புறப்பாடு
- ✓ துய்ய குலசேகரப் பெருமாளின் வார்ஷிகோத்ஸவம்
- ✓ மூன்று-நாள் தவனோத்ஸவம் – அதையொட்டி சங்கீத-கலை நிகழ்ச்சிகள்
- ✓ மயிலை வேங்கடவன் மாசிக் கடலாடி மகிழ்ந்துவரும் கோலம்
- ✓ அன்னகூட உத்ஸவம்
- ✓ தேர்வுக் காலத்தை முன்னிட்டு வெள்ளைப் பரிமுகரின் அருள்வேண்டி, நடத்தப்பட்ட 'ஏகதின வித்யா அபிவ்ருத்தி' அர்ச்சனை
- ✓ ச்ரவணம் மாத திருநக்ஷத்ரம்

இவற்றோடு, நடக்கவிருக்கும் பங்குனி-உத்திர திருக்கல்யாண உத்ஸவத்தின் விசேஷத்தை விளக்கும் சிறப்புக் கட்டுரை; பிராட்டியின் பெருமை பேசும் கட்டுரை, வழக்கமான பஞ்சாங்கம் / சிறுவர் பகுதி இவையும் இடம்பெறும்.

இத்துடன், சென்ற இதழில் இடம்பெற்ற 'அறிவோம் அர்ச்சகரை' கட்டுரை பற்றிய ஓர் 'அர்ச்சக' வாசகர் கருத்தை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம். தொடர்ந்து வாசகர்கள் தங்கள் மேலான கருத்துகளை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம். இதழ் மணம்பெற எங்களுக்கு உதவுங்கள்.

மேலும், 'அறிவோம் அர்ச்சகரை' நிறைவுப் பகுதியும் இவ்விதழை அலங்கரிக்கிறது.

'தெரித்தெழுதியும் வாசித்தும்' நற்போது போக்குவோம்.

ஸ்ரீ:

விளம்பி வருட பங்குனி மாத பஞ்சாங்கம்						
ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	
மார்ச் / ஏப்ரல்	பங் குனி					
15.03.19	1	நவமி	வெள்ளி	திருவாதிரை	மாதப்பிறப்பு - காலை - பெருமாள், தாயார் மூலவர் - உத்ஸவர் திருமஞ் சனம் - மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு பின்பு தாயாருடன் உள் புறப்பாடு	மாதப்பிறப்பு ஸ்ரீ ஐயப்பன் - தாயார் உத்ஸவம் ஸ்ரீ R. இராமகிருஷ்ணன்
16.03.19	2	தசமி	சனி	புனர்வஸு	காலை - ராமர் திருமஞ்சனம் - மாலை - ஆஸ்தானம்	V.D.R. கட்டளை
17.03.19	3	ஏகாதசி	ஞாயிறு	புஷ்யம்	காலை - பெருமாள் திருமஞ்சனம் - மாலை - பெருமாள் திருவீதி புறப்பாடு	ஸ்ரீ T.V. கோபாலதேசிகன்
18.03.19	4	த்வாதசி (20.54) / த்ரயோதசி	திங்கள்	ஆயில்யம்	திருமால்வடை	
19.03.19	5	சதுர்த்தசி	செவ்வாய்	மகம்	திருமழிசையாழ்வார்	
20.03.19	6	பௌர்ணமி	புதன்	பூரம்	ஆண்டாள்	
21.03.19	7	பௌர்ணமி (3.40) / ப்ரதமை	வியாழன்	உத்திரம்	பங்குனி உத்திரம் - காலை - பெருமாள், தாயார் திருமஞ்சனம் - மாலை - பெருமாள் திருவீதி புறப்பாடு, பின்பு தாயாருடன் பத்தி உலாத்தல் - இரவு திருக்கல்யாண உத்ஸவம், சேர்த்தி ஸேவை	ஸ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி
22.03.19	8	த்விதீயை	வெள்ளி	ஹஸ்தம்	ஊர்கோல உத்ஸவம் - மாலை - பெருமாள், தாயார், ஆண்டாள் பத்தி உலாத்தல், பின்பு பெருமாள், ஆண்டாள் திருவீதி புறப்பாடு	ஸ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி
23.03.19	9	த்ருதீயை	சனி	சித்திரை	மதுரகவிகள்	
24.03.19	10	சதுர்த்தி	ஞாயிறு	ஸ்வாதி	காலை - நரசிம்மர் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம்	
25.03.19	11	பஞ்சமி	திங்கள்	விசாகம்	நம்மாழ்வார்	
26.03.19	12	ஷஷ்டி	செவ்வாய்	அனுஷம்	நாதமுனிகள்	
27.03.19	13	ஸப்தமி	புதன்	கேட்டை	தொண்டரடிபொடிகள்	
28.03.19	14	அஷ்டமி	வியாழன்	மூலம்	திருமால்வடை	
29.03.19	15	நவமி	வெள்ளி	பூராடம்	காலை - பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை - தாயார் உள் புறப்பாடு	ஸ்ரீ T.V. கோபாலதேசிகன்
30.03.19	16	தசமி	சனி	உத்திராடம்	ஆளவந்தார்	
31.03.19	17	ஏகாதசி	ஞாயிறு	ச்ரவணம்	காலை - பெருமாள், தேசிகன் திருமஞ் சனம் - மாலை - பெருமாள், தேசிகன் திருவீதி புறப்பாடு	ஸ்ரீ வசந்த் ஷான்பாக்

ஸ்ரீ:

01.04.19	18	ஏகாதசி (4.26) / த்வாதசி	திங்கள்	அவிட்டம்	காலை – பெருமாள் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு	ஸ்ரீ S. பாலாஜி
02.04.19	19	த்ரயோதசி	செவ்வாய்	சதயம்	காலை – பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை பேயாழ்வார் திருவீதி புறப்பாடு	ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன்
03.04.19	20	சதுர்த்தசி	புதன்	பூரட்டாதி	திருமால்வடை	
04.04.19	21	அமாவாசை	வியாழன்	உத்திரட்டாதி	திருமால்வடை	
05.04.19	22	அமாவாசை (21.59) / அதிதி	வெள்ளி	உத்திரட்டாதி / ரேவதி	காலை – பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு பின்பு தாயாருடன் உள் புறப்பாடு	ஸ்ரீ S. பாலாஜி
06.04.19	23	ப்ரதமை	சனி	ரேவதி	யுகாதி பண்டிகை – ராமநவமி உத்ஸவம் 1ம் நாள் – காலை – பெருமாள் திருமஞ்சனம் – மதியம் – பஞ்சாங்க படனம் – மாலை – ராமர் திருமஞ்சனம் – பொழுதுடன் திருஆராதனம் – பெருமாள் திருவீதி புறப்பாடு – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம்	யுகாதி உத்ஸவம் – ஸ்ரீ S. கோபாலக்ருஷ்ணன் – இராமர் உத்ஸவம் ஸ்ரீ S. சுந்தரம்
07.04.19	24	த்வீதீயை	ஞாயிறு	அச்வினி	ராமர் உத்ஸவம் 2ம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீ M.A. பார்த்தசாரதி
08.04.19	25	த்ருதீயை	திங்கள்	பரணி	ராமர் உத்ஸவம் 3ம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீ S. கோபாலன்
09.04.19	26	சதுர்த்தி	செவ்வாய்	கார்த்திகை	ராமர் உத்ஸவம் 4ம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீ M. சக்ரபாணி ஐயங்கார் குடும்பம் – C/o. ஸ்ரீ C. கேசவன்
10.04.19	27	பஞ்சமி (20.16) / ஷஷ்டி – திதித்வயம்	புதன்	ரோஹிணி	ராமர் உத்ஸவம் 5ம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீ K. இராமன்
11.04.19	28	ஸப்தமி	வியாழன்	ம்ருகசீர்ஷம்	ராமர் உத்ஸவம் 6ம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீ V.C. முரளிதரன்
12.04.19	29	அஷ்டமி	வெள்ளி	திருவாதிரை	ராமர் உத்ஸவம் 7ம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீ இராம்பிரசாத் பார்த்தசாரதி
13.04.19	30	நவமி	சனி	புனர்வஸு / புஷ்யம்	ராமர் உத்ஸவம் 8ம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோகன்

ஸ்ரீ:

பங்குனி உத்திர உத்ஸவம் - ஓர் அனுபவம்

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்.

சேர்க்கும் திருமகள் சேர்த்தியில் மன்னுதல் சீர்ப்பெரியோர்க்கு *
ஏற்கும் குணங்கள் இலக்காம் வடிவில் இணையடிகள் *
பார்க்கும் சரணதில் பற்றுதல் நம்நிலை நாம்பெறும் பேறு *
ஏற்கின்ற எல்லைகள் எல்லாம் களையறவு எண்ணினமே *

ஸ்வாமி தேசிகன் — அம்ருத ரஞ்சனி - 34

நம் பாரதத்தில் தென் பகுதியில் அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் அமைந்துள்ள திருக்கோயில்களில் நடைபெறும் உத்ஸவங்களில் மிகப் பரவலாக பேசப்படுகின்ற உத்ஸவம் பங்குனி உத்திர உத்ஸவமாகும். இந்நாளில் பக்தர்கள் மிகப்பெருமளவில் தங்கள் அருகிலுள்ள கோயில்களுக்குச் சென்று தெய்வங்களை வணங்கி வழிபடுவதனால் இவ்வுத்ஸவம் ஒரு சிறந்த உத்ஸவமாகக் கருதப்படுகின்றது. பண்டைய சங்கத் தமிழ் இலக்கியாமான அகநானூற்றில் பங்குனி உத்திரத் திருநாளைப்பற்றிய ஒரு குறிப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பங்குனி உத்திரம் என்னும் இத்திருநன்னாளில் தான் :-

1) பெரிய பிராட்டியார் பார்கவ மஹரிஷியின் மகளாக பார்கவி என்னும் பெயரில் பூமியில் அவதரித்து, எம்பெருமானை மணம்புரிந்ததாகக் கூறப்படுகின்றது.
2) சக்கரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமன் ஸீதாதேவியையும், இளையபெருமாள் ஸ்ரீ லக்ஷ்மணன் ஊர்மிளையையும், ஸ்ரீபரதாழ்வான் ச்ருதகீர்த்தியையும், ஸ்ரீசத்ருக்னன் மாண்டவியையும் மணந்து கொண்டதாக ஸ்ரீமத் ராமாயணம் கூறுகிறது.
3) பல இந்து தெய்வங்கள் பிறந்ததாக புராணங்கள் கூறுகின்றன.
4) உத்திர நக்ஷத்திரமும், பௌர்ணமியும் ஒன்றாகச் சேர்கின்றன.
5) ஸூர்யன் மீனத்தில் குருவீட்டிலும், சந்திரன் கன்னியில் உத்திர நக்ஷத்திரத்தில் புதன் வீட்டிலும் நின்று சம சப்தம சேர்க்கை பெறுகின்றனர் என்கிறது வானசாஸ்திரம்.

பங்குனிஉத்திரஉத்ஸவம்பலதிவ்யதேசங்களில் கொண்டாடப்பெற்றாலும், கீழ்க்கண்ட திவ்ய தேசங்களில் இவ்வுத்ஸவம் நடைபெறும் அழகினை நாம் சற்று அனுபவிப்போம் :-

ஸ்ரீரங்கம் :-

ஆழ்வார்களாலும், ஸ்வாமி ஸ்ரீதேசிகன் முதலான ஆசார்யர்களாலும் மங்களாஸாசனம் செய்யப் பெற்றதும், 108 வைணவ திவ்யதேசங்களில் முதன்மையானதுமான பூலோக வைகுண்டம் என்று போற்றப்படும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதர் திருக்கோயிலில் பங்குனி மாதம் நடைபெறும் உத்ஸவத்திற்கு ''ஆதி ப்ரம்மோத்ஸவம்'' என்றும், இது விபீஷணனால் தொடங்கப்பட்டது என்றும் புராணங்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆதி ப்ரம்மோத்ஸவத்தின் ஒன்பதாம் திருநாளன்று நடைபெறும் சேர்த்தி உத்ஸவ வைபவம் குறித்து புராணக்கதை ஒன்று நிலவுகிறது. இதன்படி, ஸ்ரீரங்கநாதனான அழகிய மணவாளன் உறையூர் அருகே வேட்டையாடச்

தேசிக மொழி

திருவரங்கப் பெருமானது திருவுள்ளம் அடியார்களிடம் கருணை மிகுத்து எப்பொழுதும் குளிர்ந்துள்ளது. இவன் கருணை எப்பொழுதும் குறைவுபடாதிருக்கப் பெரிய பிராட்டி இவன் திருமார்பை விட்டு அகலாது வீற்றிருக்கிறாள். இவன் இரு காவிரிகளின் நடுவில் மணல்திட்டில் பள்ளிகொண்டுள்ளான். இவன் திருமேனியை நினைத்தாலே உலக மக்களின் பாபங்கள் அழிந்து போகும். இவனுடைய அழகு, நிறம், பெருமிடுக்கு ஆகியவற்றைக் காணும்போது 'இது ஒரு சிற்றுருவம் கொண்ட கடலோ!' என்று தோன்றுகிறது. இவ்வெம்பெருமானே இராமனாய் நின்ற நிலையில், ஒரு முறை சரணமடைந்தவனைக் கைவிடாது காப்பதாக உலகறிய வாக்களித்துள்ளான். இத்திருவரங்கனுடைய திருமேனித் தோற்றங்கள் எப்பொழுதும் அடியேனது உள்ளத்தில் உறைந்து நிற்க வேண்டும்.

- அபீதி ஸ்தவம்



சென்றபோது, தர்மவர்மாவின் வம்சத்தில் வந்த நந்தசோழன் என்பவனின் வளர்ப்பு மகளான ஸ்ரீகமலவல்லி நாச்சியாரைக் கண்ணாரக்கண்டு அவளை ஸ்ரீரங்கநாச்சியாரின் அனுமதியுடன் மணம் செய்து கொள்கிறார். மீண்டும் காவிரி வழியே ஸ்ரீரங்கம் திரும்பும்போது, அத்தாயாரால் அணிவிக்கப் பட்டதான மோதிரத்தை ஆற்றிலே தொலைத்து விடுகிறார். பிறகு ஏதாவது சொல்லி ஸ்ரீரங்கநாயகித் தாயாரைச் சமாளிக்கலாம் என்று எண்ணிய ஸ்ரீரங்கநாதர் பல்லக்கில் எழுந்தருளித் தாயார் ஸன்னதி வாசலுக்கு வருகிறார்.

அச்சமயத்தில் எம்பெருமான் நேரம் கடந்து வந்தமைக்கான காரணத்தைத் தாயார் வினவ, பெருமானும் தாம் காவிரியாற்றைக் கடக்கும் போது, அவள் அணிவித்த மோதிரம் தவறி விழுந்து விட்டதாகவும், அதைத் தேடிக்கண்டெடுக்க கால தாமதமாகிவிட்டதாகவும் கூறுகிறார்.

இதனால் கோபமடைந்ததாயார் தலத்தார் என்னும் தம் ஊழியர்களைக் கொண்டு தம் ஸன்னதியின் கதவுகளை மூடச்சொல்ல ஊடல்(சண்டை) துவங்குகிறது. இதற்கு ப்ரணய கலகம் என்று பெயர். உடனே எம்பெருமானுடைய ஊழியர்களான தொண்டுக் குலத்தார்கள் தாயாரிடம் ஸன்னதிக் கதவுகளைத் திறக்கும்படி கெஞ்சுகிறார்கள். பெருமாள் சலித்துப் போய் பின்வாங்குவது போல நடக்கிறார். சரி பெருமாள் கிளம்பிவிட்டார் என நினைத்துத் தாயார் கதவை லேசாகத் திறந்து எட்டிப்பார்க்க, எம்பெருமான் திரும்பி ஓடிவருகிறார். இப்படியாக மூன்று முறைகள் நடைபெறுகின்றது.

இவ்வூடலை அறிந்த நம்மாழ்வார் அங்கு எழுந்தருளி அவர்களைச் சமாதானப்படுத்த, அவரின் சொற்படி ஸ்ரீரங்கநாச்சியார், திருமகள்சேர் மார்வனும், நிலமகள் கேள்வனும், ஆய்மகள் அன்பனுமான அணியரங்கன் எம்பெருமானை ஏற்றுக்கொள்கிறார். இதையொட்டிக் கொண்டாடப் படும் வைபவத்தைத்தான் ''சேர்த்தி'' என்கின்றனர். இந்த சேர்த்தி வைபவம் ஆதி பிரம்மோத்ஸவத்தின் ஒன்பதாம் திருநாளான பங்குனி உத்திரத்தன்று தேசுடைய தேவனான திருவரங்கச்செல்வன் தாயார் சன்னதியில் பங்குனி உத்திர மண்டபத்தில் தாயாருடன் எழுந்தருளித் திருமஞ்சனம் கண்டருளியபின், பெருமாளும் தாயாரும் தம்பதி ஸமேதராக ஸேவை சாதிப்பார்கள். இது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

மேற்படி சேர்த்தியின் போதுதான், தர்சன ஸ்தாபகரான நம் ஸ்ரீபாஷ்யகாரர், கத்யத்ரயம் என்னும் ஸுப்ரஸித்தமான, ஸ்ரீரங்க கத்யம், சரணாகதி கத்யம், வைகுண்ட கத்யம் முதலிய மூன்று திவ்யமான க்ரந்தங்களை அநுஸந்தானம் செய்து, செங்கோலுடைய திருவரங்கச் செல்வன் மற்றும் ஸ்ரீரங்கநாச்சியாருடையவுமான திருவடிகளில் சரணாகதியைத் தாம் அநுஷ்டித்து திவ்ய தம்பதிகளுடைய தயைக்குப் பாத்திரமாகிறார். இது இன்றளவும் மிகச் சிறப்பாக நடைபெறும் ஒரு வைபவமாகும். இவ்வனுபவத்துடன் இப்பங்குனி உத்திர உத்ஸவம் நிறைவுபெற்று, நாம் திருவரங்க திவ்ய தம்பதிகளுடைய அநுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு அதன் நினைவாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

காஞ்சிபுரம் :-

ஸ்ரீரங்கத்தில்தான் மேற்படி வைபவமென்றால், பாரம்பரியமான கலைகளுக்கும், ஸனாதன மதங்களுக்கும் உறைவிடமாகத் திகழும் முக்திதரும் நகரேழில் முக்கியமான திருக்கச்சி என்றும், தியாக மண்டபமென்றும் கொண்டாடப்பட்டு, ஆழ்வார்களாலும், நம் தூப்புல் குலமணி ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் முதலான ஆசார்யர்களாலும் மங்களாஸாசனம் செய்யப்பெற்றதுமான காஞ்சி ஸ்ரீ பேரருளாளனாம் நம் தேவப்பெருமாளுடைய ஸன்னிதியில் ஏழு நாட்கள் நடைபெறும் இந்த பங்குனி உத்திர உத்ஸவம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இவ்வுத்ஸவத்திற்காக, விஜயநகர அரச பரம்பரையில் வந்த ஸ்ரீரங்கராயன் என்னும் அரசன் ஒரு மானியத்தை ஏற்படுத்தி வைத்தான் என்பதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

இதன்படி, தேசொத்தார் மிக்காரும் இல்லாத அத்திகிரி அருளாளப்பெருமானுக்கு, உபய நாச்சிமார்களுடனும், சேரர்குல வல்லியாம் மலையாள நாச்சியாருடனும் தினமும் கண்ணாடியறையில் காலையில் திருமஞ்சனம் நடைபெறுகிறது. பின்பு மாலையில் திருக்கோயிலிலிருந்து திருவடி கோயில் வரை உபய நாச்சிமார்களுடன் கரிகிரி மருவிய கரியவனும், சேரர்குல நாச்சியாரும் புறப்பாடு கண்டு, பிறகு நூற்றுக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளித் திருவாராதனாதி உபசாரங்களை ஏற்றுக் கொண்டு மீண்டும் கண்ணாடியறைக்கு எழுந்தருள்கின்றனர்.

இவ்வுத்ஸவத்தின் கடைசி நாளான பங்குனி உத்திர தினத்தன்று வழக்கம் போல் திருமஞ்சனம், புறப்பாடு முதலியவைகளைக் கண்டருளியபின், நூற்றுக்கால் மண்டபத்தில் துளவமுடி அருள் வரதனுக்கும், மலையாள நாச்சியாருக்கும் திருக்கல்யாண உத்ஸவ வைபவம் நடைபெறுகின்றது. அதன் பிறகு, வாரண சைலநாதனும், உபய நாச்சிமார்களும், மலையாள நாச்சியாரும் ஜகன்மாதாவான ஸ்ரீபெருந்தேவித் தாயார் ஸன்னிதிக்கு சேர்த்தி சேவைக்காக எழுந்தருள்கின்றனர். அங்கு ஏற்கனவே, தாயாருடன் ஸ்ரீ ஆண்டாளும் எழுந்தருளியிருக்க, நம் ஸ்ரீஸ்வாமி தேசிகன் அனுபவித்த படிக்கு, திருமகள், மண்மகள், நீளை முதலா எல்லாத் தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்கும் அயர்வறும் அமரர்கள் அதிபதியான அருளாளப்பெருமானை கண்ணாரக்கண்டு, கையாரத் தொழுபவர்கள் மீண்டும் பிறவாதவர்களே. அப்படிப்பட்ட ஒரு அத்புதமான பங்குனி உத்திர உத்ஸவ வைபவம் இந்த ஐந்து தாயார்களின் எம்பெருமானுடனான சேர்த்தியுடன் பூர்த்தியாகி நாம் அவர்களிடமிருந்து பிரியாவிடை பெற்றுக் கொள்கிறோம்.

மாடமாமயிலை :-

மேற்கூறிய இரண்டு திவ்யதேசங்களையும் விஞ்சும் வகையில், மஹதாஹ்வயர் என்று பெயர் பெற்ற தமிழ்த்தலைவன் ஸ்ரீ பேயாழ்வார் அவதரித்த ஸ்தலமும், நீளோதம் வந்தலைக்கும் ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமாமயிலையில்,

பங்குனியில் முக்கிய உத்ஸவங்கள்

பங்குனி உத்திரம்

திருக்கல்யாண உத்ஸவம்

மார்ச் 21 (வியாழன்)

ஊர்கோல உத்ஸவம்

மார்ச் 22 (வெள்ளி)

ச்ரவணம்

மார்ச் 31 (ஞாயிறு)

யுகாதி உத்ஸவம்

ஏப்ரல் 6 (சனி)

ஸ்ரீராம நவமி உத்ஸவம்

ஏப்ரல் 6 (சனி) முதல் 10 நாட்கள்

ஸ்ரீராமன் அவதார உத்ஸவம்

ஏப்ரல் 14 (ஞாயிறு)

பட்டாபிஷேகம்

ஏப்ரல் 15 (திங்கள்)

சித்திரை வருஷப்பிறப்பு உத்ஸவம்

ஏப்ரல் 14 (ஞாயிறு)

ஸ்ரீவேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில், நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற தூப்புல் காவலனான நம் வேதந்த வாரியனுக்காகக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அலர்மேல் மங்கை நாயகனான ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு தற்கால ரீதியில் ஒருநாள் இப்பங்குனி உத்திர உத்ஸவ வைபவம் நடைபெறுகிறது.

இவ்வுத்ஸவத்தன்று பெருமாளுக்கும் தாயருக்கும் காலையில் திருமஞ்சனம் நடைபெறுகிறது. பின்பு மாலையில் பெருமாள் திருவீதி புறப்பாடு கண்டருளித் திரும்புகால் ஆனவுடன், முதலில் பெருமாளும் தாயாரும் மாலை மாற்றிக் கொள்ளும் வைபவமும், அதன் பிறகு உள்புறப்பாடும் கண்டருளும் ஸேவையும் காணக் கண்கொள்ளாக் காட்சிகளாகத் திகழ்கின்றது.

அதன் பிறகு, கண்ணாடியறைக்கு முன்பு அமைந்துள்ள நான்குகால் மண்டபத்தில் திவ்ய தம்பதிகளான ஸ்ரீ அலர்மேல் மங்கைத் தாயாரும், ஸ்ரீஸ்ரீநிவாஸனும் எழுந்தருளித் திருவாராதனாதி உபசாரங்களைக் கண்டருளிய பின்பு, திருமாங்கல்ய தாரணத்துடன் பங்குனி உத்திர திருக்கல்யாண உத்ஸவம் நடைபெறுகிறது. இது முடிந்ததும், இத்திருக்கல்யாண வைபவத்தைக் கண்டு ஸேவித்து மகிழும் பக்தர்களுக்கு தேவஸ்தானத்தின் சார்பாக திருமாங்கல்ய சரடு மற்றும் இரவிக்கைத் துண்டு என்று பஹுமாநங்கள் திவ்ய தம்பதிகளுடைய அநுக்ரஹமாக வழங்கப்படுகின்றது.

இது முடிந்தபின், எம்பெருமான் உபய நாச்சிமார்களுடன், ஸகல புவனங்களுக்கும் காமதேனுவைப் போல் தன்னருளை வாரி வழங்கும் ஸ்ரீ தாயார் ஸன்னிதிக்கு, ''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பா'' என்னும் ஆழ்வார் வாக்கின்படி, சேர்த்தி ஸேவைக்காக எழுந்தருள்கின்றார். அங்கு ஏற்கனவே, தாயாருடன் ஸ்ரீஆண்டாளும் எழுந்தருளியிருக்க, கற்பூர ஆரத்தி காண்பிக்கப்பட ஒரு அற்புதமான சேர்த்தி ஸேவையை நம் கண்களிலே ஆனந்த பாஷ்பம் பெருக மீண்டும் மீண்டும் கண்ணாரக்கண்டு, அவ்வுத்ஸவ அனுபவத்துடனும் மறுபடியும் இவ்வைபவம் என்று கிட்டுமோ என்னும் நெகிழ்ந்த மனதுடனும், திருக்கோயிலை விட்டு அகல்கிறோம்.

இந்த பங்குனி உத்திரத் திருநாளன்று ஒரு நாள் தான் மேற்படி திவ்ய தேசங்களில் எம்பெருமான் ஸ்ரீதாயார் ஸன்னதிக்கு எழுந்தருள்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருமை வாய்ந்த பங்குனி உத்திர உத்ஸவமானது, விளம்பி வருடம், பங்குனி மாதம் 7ம் தேதி (21-03-2019) வியாழக்கிழமை அன்று நம் ஸ்ரீவேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திலும், மற்றும் அனைத்துக் கோயில்களிலும் கொண்டாடப்பட உள்ளது.

இத்தகைய பெருமை வாய்ந்த பங்குனி உத்திர திருக்கல்யாணத்தையும், மற்றும் அதன் பிறகு நடைபெறும் சேர்த்தி ஸேவையையும் யாவரொருவர்கள் ஸேவித்து அனுபவிக்கிறார்களோ, அவர்கள் தம் வாழ்க்கையில் ஏற்படும் அனைத்துவித துன்பங்களும், தோஷங்களும் நீங்கப்பெற்று நல்வாழ்வு கிடைக்கப் பெறுவர்கள் என்பது திண்ணம்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
ஸ்ரீ பார்த்தஸாரதி ஸபா
இணைந்து வழங்கும்

ஸ்ரீ உ.வே. கல்யாணபுரம்
ஆராவமுதாசார்யர் ஸ்வாமியின்

'ஸ்ரீமத் ராமாயணம்'
ஹரிகதா

தேதி: மார்ச் 24 (ஞாயிறு) முதல் 30 (சனி) வரை, தினமும் மாலை 6.30 மணிக்கு

இடம்: ஸ்ரீ தேசிக வித்யா பவனம்

ரத ஸப்தமி உத்ஸவம்

ஸ்ரீ:

தவனோத்ஸவம்



தவனோத்ஸவம்

ஸ்ரீ:

தவனோத்ஸவம்

அன்னகூட உத்ஸவம்

ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி அர்ச்சனை

ஸ்ரீ:

மாசி ச்ரவணம்

ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் நடத்திய
சிறுவர்களுக்கான, ஸ்வாமி தேசிகனின் ஸ்தோத்ரபாட, ப்ரபந்த போட்டியின் பரிசு வழங்கும் விழா

ஸ்ரீ:

இங்கிதம் அறியும் இன்கவி

ஸ்ரீ உ.வே. பழவேரி சக்ரவர்த்தி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

முன்னுரை:

எண்ணத்தைக் கண் முதலிய உறுப்புகளின் செயல்பாட்டால் வெளிப்படுத்துதல் இங்கிதம் எனப்படும். தலைப்பிலுள்ள இங்கிதம் என்ற சொல் பெரியபிராட்டியின் இங்கிதத்தைக் குறிக்கின்றது. இன்கவி என்ற சொல் ஸ்வாமி தேசிகனைக் குறிக்கின்றது. அவதாரபுருஷராய் இன்கவியான ஸ்வாமி தேசிகன் பிராட்டி இங்கிதத்தால் அருளிச்செய்த வார்த்தைகளை ச்லோகங்களில் வடித்துள்ளதைச் சுருக்கமாக விண்ணப்பிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரியபிராட்டியாரின் புன்முறுவல் வார்த்தை

ஸ்வாமி பெருந்தேவித்தாயாரை வணக்கி நின்றார். அவள் ஸ்வாமியைக் கண்டு புன்முறுவல் பூத்தாள். ஸ்வாமி அவள் புன்முறுவலால் கூறும் வார்த்தையை

மாதா தேவி! த்வமஸி பகவாந் வாஸுதேவ: பிதா மே
ஜாதஸ்ஸோ[அ]ஹேம் ஜநநி யுவயோரேகலக்ஷ்யம் தயாயா:/
தத்தோ யுஷ்மத் பரிஜநதயா தேசிகைரப்யதஸ்த்வம்
கிந்தே பூய: ப்ரியமிதி கில ஸ்மேரவக்த்ரா விபாஸி //

என்று அருளிச்செய்துள்ளார். ''தேவியே! எல்லோர்க்கும் தாயே! நீ எனக்குத் தாயாய் இருக்கிறாய்; பகவான் தந்தையாயிருக்கின்றான்; உங்கள் இருவரின் அருளுக்கு ஒரே லக்ஷ்யமாய்ப் பிறந்தவனாய் அடியேன் இருக்கின்றேன்; உங்கள் இருவர்க்கும் தொண்டுபுரிபவனாக ஆசார்யர்களால் ஸமர்ப்பிக்கப்பட்டுள்ளேன். (விரக்தனான ஒருவனுக்கு இதன்மேல் பெற ஒன்றுமில்லை) ஆகையால் 'உனக்கு இன்னும் என்ன ப்ரியம் தரவுள்ளது?' என என்னைக் கேட்பதைப்போல் புன்முறுவல் பூத்த திருமுகத்துடன் விளங்குகின்றாய்!'' என்பது இதன் பொருளாகும்.

இது பெருந்தேவித்தாயாரின் புன்முறுவலுக்கு ஸ்வாமியின் உத்ப்ரேக்ஷையானாலும் உண்மையில் தாயாரின் திருவுள்ளம் அவ்வாறே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. புன்முறுவலால் பெருந்தேவித்தாயார் அறிவித்ததை ஸ்வாமி திருவாக்கால் கண்டோம்.

இனி தூதுசெய்கண்கள் கொண்டு ஒன்று பேசிய ஸ்ரீரங்கநாச்சியாரின் திருக்கண் வார்த்தையை ஸ்வாமி அருளிச்செய்துள்ள அழகைச் சிறிது அநுபவிப்போம்.

ஸ்ரீரங்கநாச்சியாரின் திருக்கண் வார்த்தை

லக்ஷ்மீ உபாயம், உபேயம் மற்றும் புருஷகாரம் என்கிற மூன்று ஆகாரங்களை உடையவள். அவள் திருவடிகளில் எம்பெருமானார் முதலில் சரணமடைகிறார். பகவானின் திருவடித்தாமரைகளில் உண்மையான சரணாகதிநிஷ்டை விளையவும் பிராட்டியிடம் வேண்டுகின்றார்.

அதற்கு அரங்கநாச்சியார் **அஸ்து தே** (அப்படியே உமக்கு ஆகட்டும்) எனத் திருவாய்மலர்ந்து அருளினாள். பின்பு எம்பெருமானார் அரங்கனை சரணமடைகிறார். அரங்கனும் எம்பெருமானாருக்கு அபயப்ரதானம் செய்தருளி, தேஹம் விடுமளவும் அரங்கத்திலே கைங்கர்யம் செய்துகொண்டு இனிது வாழ்ந்துவரக்கடவீர்! என அனுக்ரஹித்து

தேசிக மொழி

பெரிய பிராட்டியே! உன்னை பக்தியுடன் துதித்தால் அவர்களின் நற்செயலைக் கண்டு உலகம் மகிழ்ந்து அவர்களைப் புகழ்ந்து போற்றுகிறது. அவர்களுக்கு இந்தப் பெருமையை நீதான் அருள்கிறாய். அடியேனுக்கு உன்னையன்றி வேறு புகலிடம் இல்லை. பெருமைமிக்க உன்னைத் துதிக்கும் என் முயற்சி நன்கு தலைக்கட்டப்பெறும் என்பதில் ஐயமில்லை. நான் உன் பெருமையைப் போற்றிப் புகழ்வதைக்கண்டு உலகம் முழுதும் என் செயலை மெச்சிக்கொண்டாடும் பெருமையை அடைவேன். இதில் வியப்பு ஏதுமில்லை. உன் திருவடிகளைப் போற்றித் தொண்டுசெய்ய விருப்பம் கொள்ளும் எவருக்குத்தான் நன்மை வராது? உன்னைத் துதிக்க எனக்குச் சக்தியில்லையேயாயினும், துதிப்பதில் எனக்கு இருக்கும் விருப்பமே எனக்கு சக்தியை அளித்துத் துதியைத் தலைக்கட்டி அடியேனுக்கு நன்மையை விளைவிக்கும்.

– ஸ்ரீ ஸ்துதி

வார்த்தை அருளிச்செய்தான். இப்படி ஸ்ரீசரணாகதி கத்யம் எம்பெருமானார்க்கும் தாயாருக்கும், எம்பெருமானார்க்கும் பெரியபெருமாளுக்கும் இடையில் நடந்த உரையாடல் வடிவில் அமைந்துள்ளது. ஆனால் பிராட்டிக்கும் பெருமாளுக்கும் இடையில் உரையாடல் நடந்துள்ளதாக ஒரு எழுத்தும் இல்லை.

ஸ்ரீகத்யத்ரயத்துக்கு ஸ்வாமி அருளிச்செய்துள்ள உரையில் மற்ற உரைகளில் காணப்பெறாத ரஸமான பல விஷயங்கள் உள்ளன. அதற்கு உதாரணமாக **அஸ்து தே** என்ற மூன்று எழுத்தாலான சிறிய சொற்றொடருக்கு, **உபாயதானம் ஏதஸ்யா: ததிதம் பதிஸம்மதம் ந யதா தஸ்யா: ப்ரஸீதந்த்யா: ஹாரதானம் ஹனூமதே ||** என்பது ஸ்வாமியின் ஸ்லோகரூபமான உரையாகும். அர்ச்சையில் எழுந்தருளியுள்ள ரங்கலக்ஷ்மீ உபாயத்தை அநுக்ரஹித்ததும், அனுக்ரஹத்தை உடையவளான அந்த ஸீதை அநுமனுக்கு ஹாரத்தைக் கொடுத்ததுபோலே பதியின் (அரங்கனின்) ஸம்மதத்துடன் கூடியது என்பது இதன் பொருளாகும்.

புருஷகாரம் (சிபாரிசு) செய்பவர்களிடம் இரண்டு குணங்கள் அவசியம் வேண்டும். ஒன்று யாருக்கு உதவ வேண்டுமோ அவர்களிடம் வாத்ஸல்யம் இருக்கவேண்டும்; மற்றொன்று



யாரிடமிருந்து உதவியைப் பெறவேண்டுமோ அவர்களிடம் வால்லப்யம் இருக்கவேண்டும்.

பிராட்டிக்குப் பாபிகளான ஜீவன்களிடம் வாத்ஸல்யமும், பகவானிடம் வால்லப்யமும் இருப்பதால் அவள் புருஷகாரம் செய்யவல்லளாய் இருக்கின்றாள். நம்மிடமுள்ள வாத்ஸல்யத்தால் பாபிகளான நம் ப்ரார்த்தனையையும் திருச்செவி சாற்றுகின்றாள். எம்பெருமானிடமுள்ள வால்லப்யத்தால் அவனைத் திருச்செவிசாற்றச் செய்து நம்மைக் காக்கிறாள்.

ஆனால் கத்யத்தின் அமைப்புப்படி, பிராட்டிக்கும் அரங்கனுக்கும் இடையே உரையாடல் இல்லை. ஆகையால் பிராட்டி எம்பெருமானைக் கேட்பிக்கிறாள் என்ற கருத்து கத்யத்தில் காட்டப்படவில்லை என்றே நாம் எண்ணுவோம். ஸ்வாமி இதை மறுத்து, பிராட்டி பெருமாளிடம் உரையாடிய பின்பே, எம்பெருமானாரிடம் **அஸ்து தே** என்று திருவாய்மலர்ந்து அருளியதாக மேல் காட்டப்பட்ட ச்லோகத்தில் அருளிச்செய்துள்ளார்.

மூலத்தில் இல்லாத ஒன்றைப் புகுத்த இவர் யார்? என்ற கேள்வி எழும் என எண்ணி இராமாயணத்தில் பிராட்டி இராமனிடம் கண்ணாலே பேசியதை ச்லோகத்தில் உதாஹரித்துள்ளார்.

இராமனுக்குப் பட்டாபிஷேகம் இனிதே நடந்தேறியது. அடையாளமாகச் சில பொருட்களை அங்கிருந்தவர்களுக்கு வழங்கலாயிற்று. அப்போது தன் திருக்கழுத்திலிருந்து ஒரு ஹாரத்தைக் களைந்து எடுத்து, **வாயால் ஏதும் பேசாமல், (கணவனின் அநுமதியைப் பெற)** தன் பர்த்தாவையும், வானர வீரர்களையும் திரும்பத்திரும்ப ஸீதை பார்த்தாள். பிராட்டியின் அபிப்ராயத்தை அவள் இங்கிதத்தால் அறிந்த இராமன், *ஹாரத்தை யாரிடம் உனக்கு ப்ரீதி அதிகமுள்ளதோ அவர்களுக்குக் கொடு என்றான்.* பிராட்டி உடனே அனுமனிடம் அதை வழங்கினாள்.

ஸீதை இராமனிடம் கண்ணாலே பேசினாள்; வாயாலில்லை'; அவ்வாறே அரங்கலக்ஷ்மீயும் கண்ணாலே அரங்கனைக் கேட்பித்தாள். அதாவது தூதுசெய் கண்கள் கொண்டு சில பேசினாள் என்று அருளிச்செய்தபடி. அதாவது பிராட்டி

கண்ணால் பெருமாளிடம் பேசியதால் ஸ்ரீசரணாகதி கத்யம் என்ற ஒலிப்பேழையில் அரங்கலக்ஷ்மீ மற்றும் அரங்கனிடையே நடந்த உரையாடல் ஒலிப்பதிவாகவில்லை என்பது ஸ்வாமியின் திருவுள்ளமாகும்.

முடிவுரை

ஸ்வாமி ஸ்ரீஸ்துதி மட்டுமின்றி மஹாலக்ஷ்மியின் பெருமையை ஆங்காங்கே எடுத்துரைத்துள்ளார்.

ஸ்ரீ ஆளவந்தாரின் பிராட்டிவிஷயமான சதுச்லோகீ என்ற அழகிய ஸ்ரீஸூக்திக்கு ஆழமான உரையிட்டுள்ளார். ஸ்ரீஸூக்தத்தை அறியாதாரும், அதைப் பாராயணம் பண்ண அதிகாரிகளில்லாத பெண்கள் முதலானோரும் ஸ்ரீஸூக்த பாராயணத்தின் பயனைப்பெறும்படி ஸ்ரீஸூக்தத்தின் ஸாரத்தை மும்மணிக்கோவையின் முதல் பாசுரத்தில் அடக்கி அருளிச்செய்துள்ளார்.

மேற்படிகத்யத்ரயஉரைமற்றும்பற்பலநூல்களில் அவள் பெருமையையும் அவள் திருவுள்ளத்தையும் ரஸத்துடன் அருளிச்செய்த பெருமை ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான இவ்வாசிரியர்க்கே உண்டு.

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:

அறிவோம் அர்ச்சகரை

3. திருப்பாச்சனூர் தேவநாதாசார்யர் ஸ்வாமி



ஸ்ரீ உ.வே. திருப்பாச்சனூர் கந்தாடை தேவநாதா சார்யர் ஸ்வாமி, தமது தகப்பனாரிடமே உபயுக்த அநுஷ்டானங்களை ஸேவித்து, பின்பு ஸ்ரீ நாவல் பாக்கம் ஸ்வாமி அய்யா தேவநாத தாதயார்ய மஹாதேசிகனிடத்தில் வைஷ்ணவ தீக்ஷையான பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொண்டவர்.

மதுராந்தகத்தில் பஞ்சகால பராயணராகவும் தர்மசாஸ்த்ரத்தில் சிறந்த ஜ்ஞானத்துடன் 'கருடபுரம் சின்னஸ்வாமி' என்று எழுந்தருளியிருந்த ஸ்ரீநிவாஸமஹாதேசினிடம் இந்த ஸ்வாமி தம்முடைய ஆத்மரக்ஷாபரத்தை ஸமர்பித்து க்ருதக்ருத்யரானார்.

தேவநாதாசார்யர் ஸ்வாமி திருவ ஹீந்திரபுரத்தில் எழுந்தருளியிருந்த உ.வே. ஈ.டி. ஸ்ரீநிவாஸாசார்யரிடம் அருளிச்செயலையும் ஸ்தோத்ரபாட சந்தையையும் அதிகரித்தவர். ஸுப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த பரமபரி திருக்குடந்தை ஆண்டவனோடு சிலகாலம் ஸஞ்சாரமாக சென்று அந்த ஆசார்யனின் அநுக்ரஹத்திற்கும் பாத்ரமானவர்.

இந்த ஸ்வாமி, காஞ்சிபுரத்தில் பாஞ்சராத்ர தீக்ஷைபெற்று ஸ்ரீ கோஷ்டீபுரம் ராமாநுஜாச ார்யர் ஸ்வாமியினிடத்தில் ஆகமம் ஸேவித்து, சென்னை அஷ்டலக்ஷ்மீ சந்நிதியில் அர்ச்சகராகப் பணிபுரிந்தார்.

1985-ம் ஆண்டிலிருந்து நம் தேவஸ்தானத்தில் நியமிக்கப்பட்டு பல வருஷங்களாக அர்ச்சக கைங்கர்யம் செய்து வரும் இந்த ஸ்வாமி திவ்ய தம்பதிகளிடமும் ஸ்வாமி தேசிகனிடமும் சிறந்த ஈடுபாடு உள்ளவர். திருவயிந்தை மற்றும் திருக்குடந்தை போன்ற திவ்யதேசங்களை அடியொற்றி சாற்றுபடி சாற்றுவதில் வல்லவர். குறிப்பாக, இவருக்கு ஸ்ரீஹயக்ரீவ மூர்த்தியிடம் ப்ரத்யேக ஈடுபாடு உண்டு.

இந்த ஸ்வாமி மேலும் பல வருஷங்கள் கைங்கர்யம் செய்யவேணுமாய் எம்பெருமானிடம் ப்ரார்த்திப்போம்.

உயரிய கைங்கர்யத்திற்கு ஓர் ஊக்கம்

அணியார் பொழில் சூழ் அரங்கநகர் பெருமானின் பரிபூர்ண அநுக்ரஹத்தாலும், அலர்மேல் மங்கை உறை மார்பனின் திவ்ய விசேஷ கடாக்ஷத்தாலும் தங்கள் திருக்கோவில் சார்பாக வெளிவரும் கடந்த மாத (மாசி) பதிப்பில் 'அறிவோம் அர்ச்சகரை' என்ற தலைப்பினில் வெளிவந்த கட்டுரையினைக் கண்டு எல்லையில்லா மகிழ்வுற்றேன்.

எம்பெருமானின் திருமேனியை அனுதினமும் தொட்டு கைங்கர்யம் பண்ணும் அந்த ஸ்வாமிகள் என்றென்றும் வணங்கத் தக்கவர்கள். கீதாசார்யன் ''அர்ச்சகஸ்து ஹரி: சாக்ஷாத்'' என்று அவர்களுக்கு ஓர் உயரிய இடத்தினைத் தந்து மகிழ்ந்தான். இவ்வாறு சிறப்புமிக்க கைங்கர்யம் பண்ணுமவர்களுக்கு ஓர் ஏற்றமும் ஊக்கமும் தரும் வகையில் அந்த பரமாத்வே மனம் குளிரும் வண்ணம் இக்கட்டுரை அமைந்திருந்தது.

யான் ஆராதிக்கும் சக்ரவர்த்தித் திருமகனின் குல தனமான ரங்கநாதனிடத்தில், இந்த ஸ்வாமிகள் பல்லாண்டு பல்லாண்டு கைங்கர்யம் செய்திட பிரார்த்திக்கின்றேன்.

ஸுந்தர் பட்டர், ஸ்ரீரங்கம் பெரிய கோயில்

4. வில்லிவலம் ஸம்பத்குமாராசார்யர் ஸ்வாமி



ஸ்ரீ வில்லிவலம் ஸம்பத்குமாராசார்யர் ஸ்வாமி, திருவள்ளூரில் தம்முடைய தகப்பனாரிடம் உபயுக்தமாக ஸம்ப்ரதாய நூல்களை அதிகரித்தவர். ஜகத் விக்யாதராய் எழுந்தருளியிருந்தவரும் பகவத்விஷயத்திற்கே அற்றுத் தீர்ந்தவருமான ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருவடிகளில் இந்த ஸ்வாமிக்கு ஆச்ரயம்.

காஞ்சீபுரத்தில் இந்த ஸ்வாமி பாஞ்சராத்ர தீக்ஷை பெற்று கல்கத்தா, பூனா போன்ற நகரங்களில் உள்ள திவ்ய ஸந்நிதிகளில் கைங்கர்யம் செய்தவர்.

ஸ்ரீ உ.வே. நெல்வாய் வரதாசார்யர் ஸ்வாமியிடமும், நம் ஸந்நிதியின் ஆராதகர் மணி ஸ்வாமியிடமும், ஸ்ரீ ஸம்பத் ஸ்வாமி பாஞ்சராத்ர ஆகம பாடம் பெற்றவர். நம் ஸந்நிதியில் ஏறத்தாழ பத்து வருடங்களாக கைங்கர்யம் செய்து வருபவர்.

பரம ஸாத்விகரான இந்த ஸ்வாமி மேலும் பல கைங்கர்யங்கள் செய்ய வேணுமாய் எம்பெருமான் தொடக்கமான ஆசார்ய பரம்பரையை வந்தனம் செய்வோம்.

5. கோழியாலம் சேஷசாயீ (ஸ்ரீராமன்) ஸ்வாமி

கோழியாலம் சப்தம் வங்கீபுரம் சேஷசாயீ ஸ்வாமி, சிறுவயதிலேயே தம்முடைய சிறிய பாட்டனாரும், மஹாவித்வானும் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தவருமான ஸ்ரீ உ.வே. ரங்கநாதார்ய மஹாதேசிகனிடத்தில் பரஸமர்ப்பணம் செய்துகொண்டார். பிறகு தமது பெரிய தகப்பனாரிம் பஞ்ச ஸம்ஸ்காரமும் பெற்றார்.

காஞ்சீபுரத்தில் பாஞ்சராத்ர தீக்ஷைபெற்று, வடதேசத்தில் சில ஸந்நிதிகளில் கைங்கர்யம் செய்து கடந்த 2006-ம் வருஷம் முதல் நம் தேவாஸ்தானத்தில் முதலில் மணியகாரராகப் பொறுப்பு வகித்தார்.

பின்பு 2011-ம் வருஷம் முதல் இந்த ஸ்வாமிக்கு அர்ச்சக கைங்கர்யம் ப்ராப்தமானது. ஸ்ரீராமன் ஸ்வாமி தம்முடைய மாதாமஹர் ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ராஜாமணி ஸ்வாமி போன்றே எம்பெருமானுக்கு அலங்காரம் செய்வதிலும், வாகனப்பட்டறையில் திருக்குடை கைங்கர்யம் செய்வதிலும் ஸமர்த்தர்.

இந்த ஸ்வாமி பல ஸம்வத்ஸரங்கள் நம் ஸந்நிதியில் மேன்மேலும் பல கைங்கர்யங்கள் செய்துகொண்டு வரவேணுமாய் திவ்ய தம்பதிகளை ப்ரார்த்திப்போம்.

தொகுப்பு:
ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

ஸ்ரீ:

பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

ஸுந்தரராஜன்: பாட்டீ! 'வேதாந்தாசார்ய மங்கள'த்துக்கு அர்த்தம் சொல்ல ஆரம்பிச்சேள். மொதல் ச்லோகத்துக்கு மேலெழுந்தவாரியா பொருள் சொல்லிட்டு, விசேஷ அர்த்தங்கள அப்பறம் சொல்றேன்னேள். இப்ப சொல்றேளா ?

பங்கஜம் பாட்டீ: சொல்லிக்கொடுத்த மொதல் ச்லோகத்தோட அர்த்தத்த சொல்லுங்கோ பாக்கலாம்.

ஸுமதி: நான் சொல்றேன், பாட்டீ ! வேங்கடேசன்-னு அழைக்கப்படற ஸ்வாமி தேசிகனுக்கு உண்டான மூணுவித பெருமைகளையும் குறிப்பிடறார். மேலும் அவர்க்கு எல்லா நன்மைகளும் உண்டாகக் கடவது – அப்படீன்னு, ஆசீர்வாதம் பண்றார். ஸரியா ?

பங்கஜம் பாட்டீ: (சிரிச்சிண்டே) நன்னா சொன்னே; ஆனா ஒரு சின்ன திருத்தம் – இப்படிச் சொல்றவர் குமார வரதாசாரியர் இல்லையா; அவர் போய் பெரியவரான ஸ்வாமிக்கு 'ஆசீர்வாதம்' பண்றார், அப்படீன்னு செ ால்றது பொருத்தமாயிருக்குமா ! அதனால, 'மங்களாச ாஸநம்' பண்றார்-ன்னு சொல்லணும்.

ஸுந்தரராஜன்: அதாவது, பெரியவா நன்னா இருக்கணும்-னு சின்னவா ஆசப்படறது தப்பேயில்ல; ஆனா, அதை மங்களாசாஸநம்-னு சொல்லணும். இப்படித்தானே பெரியாழ்வார் பெருமாளுக்கு 'பல்லாண்டு' பாடினார். உல்டா-வா, சின்னவா நன்னா இருக்கணும்-னு பெரியவா அனுக்ரஹம் பண்ணா, அதுக்குப் பேர் ஆசீர்வாதம் – ஸரியா பாட்டீ !

பங்கஜம் பாட்டீ: ரொம்ப ஸரி. இப்போ மொதல் ச்லோகத்தோட விசேஷ அர்த்தங்களப் பாப்போம். ஸ்வாமிக்கு உண்டான மூணு பிருதங்கள குறிப்பிட்டார் அல்லவா. இந்த அடைமொழிகளெல்லாம், அவரே போட்டுண்டது இல்ல. உயர்ந்த-வா கொடுத்தது.

ஸுமதி: யார் கொடுத்தா, பாட்டீ ! எப்போ/ எதுக்காக கொடுத்தா ?

பங்கஜம் பாட்டீ: ஒரு ஸமயம் ஸ்ரீரங்கத்துல, வேற-மதத்தச் சேர்ந்த வாதி ஒருவர், அங்கே இருக்கிற ஸ்ரீவைஷ்ணவாகிட்ட தன்ன வாதத்துல ஜெயிங்கோ பாக்கலாம்-னு சவால் விட்டார்; அப்படி ஜெயிக்கலேன்னா, நீங்க எல்லாரும் நேக்கு அடிமை-ன்னு எழுதிக்கொடுக்கணும்-னார். ஸ்ரீரங்கத்துல இருக்கறவாளால அவர ஜெயிக்கமுடியல. எல்லாரும் என்ன பண்றது-ன்னு யோசிச்சு, காஞ்சீபுரத்துலேர்ந்து ஸ்வாமியை ஏள்ளப்பண்ணி வாதம் பண்ணச் சொல்றதுதான் ஒரே வழி-ன்னு தீர்மானிச்சா. ஸ்வாமியும் ஏள்ளி, எம்பெருமான்தான் பரதேவதை-ன்னு வேத-ப்ரமாணங்களைக் காட்டி வாதத்திலே ஜயித்தார். பெரியபெருமாளுக்கு உள்ளம் குளிர்ந்தது. ஸ்வாமிக்கு உள்ள வேத-வாதத் திறமையை மெச்சி தன் விருதான 'வேதாந்தாசார்யன்' என்பதை, ஸ்வாமிக்கு பஹுமானமாக வழங்கினார். பெரிய பிராட்டியார் மனமுவந்து தன் அன்பளிப்பா, ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் என்ற பிருதத்தை ப்ரஸாதித்தார். அங்கு குழுமியிருந்த வைணப்பெரியோர்களும் நன்றி தெரிவிக்கும் வகையில் 'கவி-தார்க்கிகஸிம்ஹம்' எனும் பட்டத்தை, அரங்கனோட அனுமதியோட ஸ்வாமிக்கு ஸமர்ப்பிச்சா.

ஸுந்தரராஜன்: பாட்டீ ! ஒரு ஸந்தேஹம். ஸ்வாமி, இந்த பட்டம்/ பதவி இதையெல்லாம் விரும்பாதவர்-னு சொல்றாளே; அப்படியிருக்கச்சே தான்பண்ண சில ஸ்தோத்ரங்கள்ளேயும்/ மற்ற க்ரந்தங்கள்ளேயும் இந்த பட்டத்தை இட்டு தன்னை சொல்லிக்கொள்றாரே, அது ஏன் ?

பங்கஜம் பாட்டீ: நன்னாகேட்டே; அதெல்லாம் தன்னை 'பீத்திக்கறத்துக்காக' அவர் போட்டுக்கல. ஸாக்ஷாத் பெருமாளும்/ பிராட்டியும்/ பெரியோர்களுமே கொடுத்த பிருதங்களுக்கு மரியாதை/ கௌரவம் காட்ற செயலா இதை எடுத்துக்கணும். ஸரி, அடுத்த ச்லோகத்துக்குப் போவோமா ...

'' நபஸ்ய மாஸி ச்ரோணாயாம் அவதீர்ணாய ஸூரயே|
விச்வாமித்ர அந்வயாய அஸ்து வேங்கடேசாய மங்களம்||''[2]

இதன் திரண்ட பொருள்: 'புரட்டாசி மாஸம்/ திருவோண நக்ஷத்ரம் கூடிய நல்ல ஒரு நாள்ள, விச்வாமித்ர

கோத்ரத்துல அறிவுள்ளவரான வேங்கடேசன் அவதரித்தார்; அவருக்கு மங்களங்கள் உண்டாகட்டும்'.

ஸுந்தரராஜன்: ஸ்வாமி பொறந்த 'டேத் ஆப் பர்த்-தை' சொல்றது; இதுக்கு விசேஷ அர்த்தம் இருக்கா, பாட்டீ!

பங்கஜம் பாட்டீ: ''நம்ம பெரியவாளோட வாக்கு-ல அர்த்தங்கள்-லாம், தானா ஓடி வந்து விழும்''-னு சொல்லுவா. இந்த ச்லோகமும் அப்படிப்பட்டதுதான். இப்ப ஒங்களுக்கெல்லாம் 'எக்ஸாம்' ஆச்சே; **அப்பறம் சொல்லட்டுமா ?**

ஸுமதி: இல்ல பாட்டீ; நாங்க படிச்சுட்டோம்; அதுவும் இல்லாத, நீங்க சொல்றது ரொம்ப 'இன்டரஸ்டிங்-கா' இருக்கு. ஸ்வாமி தேசிகன், நல்ல புத்தி குடுக்கமாட்டாரான்ன !

பங்கஜம் பாட்டீ: சமத்து; சொல்றேன், கேளுங்கோ. அவருடைய 'டேத் ஆப் பர்த்', ஸாதாரண நாளில்ல; பெருமாள் திருமலையப்பன் இந்த உலகத்துல அவதாரம் பண்ண நாளாக்கும். இதனாலேயே ஸ்வாமிய, பெருமாளோட அவதாரம்-னு சொல்லலாம்போல அமைஞ் சிருக்கு. இத, இந்த ஸ்தோத்ரத்துலயே மேலே சொல்லப் போறார்.



இரண்டாவது- நம்பள சொல்றா மாதிரி அவர 'பொறந்தார்'-னு சொல்றதில்ல. ஏன்னா, அவர் அவதார-புருஷர். பரமபதத்துல வாஸம் பண்ற நித்யஸூரியாக்கும்! அதனால, அவதாரம் பண்ணார் – அப்படீன்னு சொல்றார். 'அவதாரம்' அப்படீன்னா, 'இறங்கி அப்படீன்னா, 'இறங்கி வருதல்'-ன்னு அர்த்தம் – க்ருபையோட நமக்கு நல்ல அறிவுரைகளச் சொல்லி, திருத்தி, நல்வழிப்படுத்தர்த்துக்கு தன் உயர்ந்த நிலையிலேர்ந்து, நாம் இருக்கும் தாழ்ந்த நிலைக்கு வராரோல்யோ !

ஸுந்தரராஜன்: (குறும்பாக) அப்படீன்னா, 'இரங்கி வரார்-னு' சொல்லலாம், பாட்டீ !

ஸுமதி: அண்ணா ! தமிழ் எக்ஸாமுக்கு நல்ல 'ப்ரிபரேஷனா' !!

பங்கஜம் பாட்டீ: (சிரிச்சிண்டே) குறும்புக்கார பசங்க.

ஸுந்தரராஜன்: (குறுக்கிட்டு) பாட்டீ! ஸ்வாமியை, 'அறிவுள்ளவரான வேங்கடேசன் அவதரித்தார்' அப்படீன்னு ச்லோகத்துல சொல்றாரே; பிறந்து-வளர்ந்து-படிச்சு அப்பறம்தானே 'அறிவுள்ளவராக'முடியும் ?

பங்கஜம் பாட்டீ: நீ சொல்றது, ஸாதாரண மனுஷ்யாளுக்கு அப்படி ஏற்படும். இவர்தான் அவதார-புருஷர்-னு சொன்னேனே; அதனால, 'கருவிலே திரு உடையார்' என்னும்படி எம்பெருமானின் 'ஜாயமாந கடாக்ஷம்' பெற்றவராகிறார். ஆக, பொருத்தம்தான். இன்னும், அடுத்த ச்லோகத்திலே சொல்லப்போறார் – இவர் தந்தை 'அனந்தஸூரி'-ன்னு. ஸூரியின் பிள்ளை ஸூரியாக இருக்கறது, ஆச்சர்யம் ஒண்ணுமில்லையே – 'பறப்பதன் குஞ்சு தவழாது'-ன்னு ஒரு பழமொழி உண்டோல்யோ !!

அடுத்து, விச்வாமித்ர வம்சத்தில் – கௌசிக கோத்ரத்தில் – உதித்தவர், அப்படீன்னு சொன்னத்துக்கு, அந்த ரிஷியோட குணங்கள்ளாம் இவருக்கும் இருக்கு-ன்னு காட்றத்துக்காக. அவர்தாம் க்ஷத்ரியராபொறந்து, கடும் தபஸ்பண்ணி 'ப்ரஹ்மரிஷி' பதவி பெத்தவராச்சே. ஆகையால, அவருடைய ஞானம்/ ஸாமர்த்யம்/ விடா முயற்சி ஆகியவை இவரிடம் இல்லாமல் போகுமா !

இன்னொரு விஷயம் – தூய புல்லுக்கு குசிகம் எனச் சொல்வதுண்டு – ஆக, அதை 'விச்வாமித்ரம்' அப்படீன்னும் சொல்லுவா. அந்த தூப் புல் வம்சத்தார் வஸிக்கிற ஊரானதனால், அந்த இடத்துக்கே 'தூப்புல்'-னு பேர் வைச்சுட்டா. இதை ஸ்வாமியே 'தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு' அப்படீன்னு பெருமையோட சொல்லிக்கிறார். இவ்வளவு அர்த்தங்கள 'விச்வாமித்ர குலோத்பூதம்' அப்படீன்னு சொன்னதில, நெனச்சு அநுபவிக்கணும்.

ஸுந்தரராஜன்: அப்பா ! ஒங்களுக்கு ''வ்யாக்யான சக்ரவர்த்திநீ'' அப்படீன்னு பேர் கொடுக்கலாம் பாட்டீ! எவ்வளோ அர்த்தம் சொல்றேள் !!

பங்கஜம் பாட்டீ: எல்லாம் பெரியவா சொல்ற அர்த்தம்தாம். ஸந்தோஷம் – நீங்க நன்னா கேட்டுக்கறேள்.

ஸரி, இன்னிக்கி இதோட நிறுத்திண்டு, மூணாவது ச்லோகத்தை நாளைக்குச் சொல்லலாம்.

(தொடரும்)

With Best Compliments from:

Smt. Mythili Chakrapani,
No.3, 2nd Street,
Jagadambal Colony,
Royapettah, Chennai - 14.

&

Purisai (Mani)
Rangachariar Family,
No. 14/22, Arisikaran Street,
Mylapore, Chennai - 4.

SVDD thanks Smt. Mythili Chakrapani & Purisai (Mani) Rangachariar Family for sponsoring this month's issue of Desika Sandesam

மாசி பௌர்ணமி - ஸமுத்ர ஸ்நானம்

மாசி பௌர்ணமி - ஸமுத்ர ஸ்நானம்